**செய்தி வெளியீடு எண்: 674** **நாள்: 18.09.2018**

## செய்தி வெளியீடு

### மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் லண்டன் மாநகரத்தில் மின்சார பேருந்து, பணிமனையினை பார்வையிட்டு, C-40 அமைப்புடன் ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னை மாநகர பொதுமக்களின் போக்குவரத்துத் தேவையினை பூர்த்தி செய்வதில் மாநகர் போக்குவரத்துக் கழகம் பெரும்பங்காற்றி வருகிறது. குறிப்பாக, சுற்றுப்புறச் சூழ்நிலைகளை பாதுகாக்கின்ற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு காற்று மாசுபடுவதைக் குறைக்கின்ற வகையில், மேலை நாடுகளில் முன்னேறிய மாநகரங்களை உறுப்பினர்களாகக் கொண்டு, லண்டன் மாநகரத்தில் இயங்கி வரும் C-40 என்கின்ற முகமையின் வழிக்காட்டுதலின்படி, சென்னையில் மின்சாரம்/மின்கலன் பேருந்துத் திட்டத்தினை செயல்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் முன்னிலையில் கடந்த மார்ச் திங்களில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறைக்கும், C-40 முகமைக்குமிடையே கையெழுத்தானது.

சுற்றுச்சூழல் மாசுபாட்டினை குறைக்கின்ற வகையில் மின்சார பேருந்துகளை கொள்முதல் செய்தல், புதிய தொழில்நுட்பங்களை செயல்படுத்துதல், குறைந்த விலையில் மின்சார பேருந்துகளை கொள்முதல் செய்தல், இவ்வகை மின்சாரப் பேருந்துகளை திறம்பட இயக்கிட சாலை வரைபடம் தயாரித்தல், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், தூய்மையான மின்சாரத்தினை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் இம்முகமையானது தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறைக்கு உதவிகளை வழங்கும்.

இத்திட்டத்தினை செயல்படுத்துகின்ற வகையில் C-40 முகமையின் வெளிநாட்டு பிரதிநிதிகள், ஜேம்ஸ் அலெக்சாண்டர் (James Alexander, Head of the CFF (C40), ஜீர்கன் பாமான் (Jiirgen Baumann, (Capacity Development and Municipal Finance Expert)) கடந்த **21.08.2018** முதல் **24.08.2018** வரையில், சென்னையில் முகாமிட்டு பல்வேறு துறைகளான போக்குவரத்து, நிதி மற்றும் எரிசக்தித் துறையின் உயர்மட்ட அரசு அலுவலர்களை நேரில் சந்தித்து கலந்தாய்வு மேற்கொண்டனர். குறிப்பாக, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.PWC.டேவிதார்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோருடன் விரிவாக கலந்துரையாடி, விரைவில் செயல்படுத்தப்படும் இத்திட்டங்கள் பற்றி ஆலோசித்தனர். மேலும், மாநகர் போக்குவரத்துக் கழக

அடையாறு பணிமனையில் நேரில் ஆய்வு செய்து போக்குவரத்துக் கழகங்களின் தற்போதைய செயல்பாடுகளையும் அறிந்து கொண்டதோடு, அமெரிக்கா மற்றும் லண்டனில் நடைபெறும் கருத்தரங்குகளில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களையும், கூடுதல் தலைமைச் செயலாளர் (போக்குவரத்துத் துறை) அவர்களையும் பங்கேற்றுச் சிறப்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

C-40 முகமையின் அழைப்பினை ஏற்று, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களும், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. PWC. டேவிதார்,இ.ஆ.ப., அவர்களும் லண்டன் மாநகரத்தில் மின்சாரத்தால் இயங்கும் பேருந்தினையும், பேருந்து பணிமனையினையும் 17.09.2018 அன்று பார்வையிட்டார்கள். லண்டன் போக்குவரத்து அமைப்பின் (Transport for London) தலைவர் திரு. டாம் குன்னிங்டன் (Tom Cunnington) அவர்களை சந்தித்து பேருந்துகளை இயக்குதல், நிர்வகித்தல், செயல்படுத்துவதில் உள்ள பல்வேறு நுணுக்கங்கள் குறித்தும் விரிவான ஆலோசனை மேற்கொண்டார்கள். மின்சாரப் பேருந்து பணிமனைகள் அமைப்பதில் பெரிதும் பங்காற்றி வரும், லண்டன் போக்குவரத்து அமைப்பின் போக்குவரத்து ஆலோசகர் திரு.மைக் வெஸ்டன் (Mike Weston) அவர்களை சந்தித்தானர்.

பின்னர், லண்டன் மாநகரம், வாட்டர்லூ (Waterloo)–வில் செயல்படும் மின்சார பேருந்துப் பணிமனையினை பார்வையிட்டு, பேருந்துகள் இயக்கம், பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப செயல்பாடுகள் குறித்தும் கேட்டறிந்தனர். இந்நிகழ்வின்போது C-40 முகமையைச் சேர்ந்த செல்வி.அனிலிசி ரோசா (Miss.Anelise Rosa), செல்வி.அண்ணா பெய்ரிஸ் (Miss.Anna Peiris), திருவாளர்கள். சிமோன் (Simon), குஞ்சன் (Gunjan) மற்றும் வாட்டர்லூ பணிமனையின் தொழில்நுட்ப இயக்குநர் திரு.ரிச்சர்டு ஹரிங்டன் (Richard Harrington)ஆகியோர்கள் உடன் இருந்தனர். இறுதியாக லண்டனில் உள்ள இந்திய தூதரகத்தில் போக்குவரத்துத் தொடர்பாக திரு.பிரேம் பார்த்தசாரதி மற்றும் திரு.பொன்டாக் (Pontoq) ஆகியோருடனும் கலந்தாலோசித்தனர்.

C-40 முகமையின் உதவியோடு விரைவில் சென்னையில் மின்சார பேருந்துகள் இயங்கிட, இந்தப் பயணம் பெரிதும் பயன் தரும் வகையில் இருந்ததாக மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் C-40 முகமையின் ஏற்பாட்டாளர்களிடம் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**